**Media:** Tamil Murasu
**Date:** 9 April 2023
**Page:** 2

# முதியோருக்கு உதவும் ரேடார் தொழில்நுட்பம் பரிசீலனை

முதியோர் வீடுகளில், வேறு இடங்களில் கீழே விழுந்துவிட்டால் அது பற்றி தானாகவே பராமரிப்பாளருக்குத் தெரியப்படுத்தக் கூடிய ஒரு தொழில்நுட்பத்தை அரசாங்க தொழில்நுட்ப அமைப்பும் (GovTech) ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பும் (AIC) பரிசோதித்து வருகின்றன.

மரின் பரேட், பீடோக் சவுத், ஆங் மோ கியோ ஆகியவற்றில் வசிக்கும் சுமார் 150 முதியவர்கள் பரிசோதனைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தொடுதிரை வசதியுள்ள, இணைய இணைப்புடன் கூடிய கையடக்கச் சாதனம் கொடுக்கப்படும்.

அந்தச் சாதனம், ரேடார் ஒன்றுடன் சேர்ந்து செயல்பட்டு முதியோர் கீழே விழுவதைக் கண்டுபிடித்து தெரிவித்துவிடும்.

நடமாட்டப் பிரச்சினை உள்ள முதியவர்கள், அந்தச் சாதனத்தின் மூலம் பலதுறை மருந்தக மருத்துவருடன் கலந்து ஆலோசிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.